கடலூர் மாவட்டத்திற்கு பல்வேறு அரசு நிகழ்ச்சிகளுக்கும் மற்றும் கழக நிகழ்ச்சிகளுக்கும் வருகை தரும்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!



கடலூர் மாவட்டத்தில் நாளை (25.11.2024 - திங்கட்கிழமை) கடலூர் கம்மியம் பேட்டை புனித வளவனார் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறும் கடலூர் மாவட்டத்திலுள்ள 683 ஊராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பொதுமக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்ட அரங்கில் நடைபெறும் அனைத்து துறைகள் சார்பாக நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டத்திற்கும், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்புஅணி நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்திற்கும் மற்றும் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பு விழாவிற்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனங்கள் வழங்குவதற்கும் வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாளை (25. 11. 2024 - திங்கள்கிழமை) காலை 9 .00 மணி அளவில் கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்டில் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. அது சமயம் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்,வட்ட,வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர், மண்டலக்குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்டதி.மு.க.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. பங்கேற்பு:

# 131வது வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் அறிக்கை!

சென்னை, நவ.24-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை.த.வேலு எம்.எல்.ஏ., வேண்டுகோளை ஏற்று, தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி 131வது வட்டக் கழக செயற்குழுக் கூட்டம் வட்ட செயலாளர் மு.ம. செந்தில்குமார் தலைமையில் நாளை (25.11.2024, திங்கட்கிழமை) மாலை 6 மணி யளவில் மேற்கு மாம்பலம், போஸ்டல் காலனி 4வது தெருவில் உள்ள மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறு கிறது.

கூட்டத்தில் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.,தியாகராயர்நகர் மேற்குப் பகுதி கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன் எம்.சி., தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி அவைத் தலைவர் மு.மணிவண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடுவது குறித்து ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

ஆகையால் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், அணி களின் அமைப்பா ளர்கள் துணை அமைப்பா ளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு 131வது வட்டச் செயலாளர் மு.ம. செந்தில் குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கல்!
## பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் அறிவிப்பு!

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் இன்று (24.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணிக்கு 19 வது வட்டம், மாத்தூர், எம்.எம்.டி.ஏ, இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் பகுதி அவைத் தலைவர் வி.திராவிடவீரன் தலைமையிலும், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனைகள் வழக்குகிறார்.

மாதவரம் தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ.அருண் மற்றும் மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:-** தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

**புழல் எம்.நாராயணன்**
**செயலாளர் — மாதவரம் வடக்குப் பகுதி தி.மு.க.**

# "கலைஞரின் கண்மணி"யே! கண்மூடிப் போயினையோ?



கலைஞரின் கண்மணியே!
கண்மூடிப் போயினையோ
கழகம் என்னும்
மலைமீதில் ஏற்றிவைத்த
மணிவிளக்கே! தமிழர்தம்
மாண்பை இந்த
உலகுக்கு மெய்ப்பித்தே
உலாவந்த திருமகனே!
உயிர்மூச் செல்லாம்
தலையாய தமிழ்க்கென்பாய்!
தந்தாயோ அதை! எம்மைத்
தவிக்க விட்டே?

தான்வேண்டும் இலட்சியத்தில்
தடம் மாறா திருந்தவனே!
தருக்கம் செய்தே
ஏன்வேண்டும் நமக்கெல்லாம்
"இன்பத் திராவிடம்"
எனவி ளக்கித்
தேன்வேண்டும் வண்டுபோல்
திளைக்காத நின்அறிவுத்
திறனைக் கண்டு
"வான்"வேண்டும் என்றுன்னை
வரவழைத்த தோ?எம்மை
வாட விட்டே!

சரஞ்சரமாய் மாலைகள்உன்
சாதனைக்கே! அரசியல்
சதுரங்க த்தில்
திரும்பியன்றோ பார்க்கவைத்தாய்
தில்லியினைத் தமிழகத்தின்
திக்கு நோக்கி!
விரும்பிஉன்றன் ஆற்றலினை
வெளிநாட்டார் எண்ணி எண்ணி
வியக்கும் நேரம்,
அரும்பிய பூ உதிர்ந்ததுபோல்
அகன்றாயே! எமைத்துயரில்
ஆழ்த்தி விட்டே!

முள்ளிருக்கும் பலாப்பழம்போல்
முகமிருக்கும் கோபத்தில்!
முனைந்து பார்த்தால்
உள்ளிருக்கும் சுளைபோலும்
ஒப்பற்ற அன்பிருக்கும்
உன்னி டத்தில்!
கள்ளிருக்கும் பூவைப்போல்
கள்ளமின்றிச் சிரிப்பவனே!
கலைஞர் நெஞ்சில்
பிள்ளையைப்போல் தவழ்ந்தவனே!
பிரிந்தாயே எமைக் கண்ணீர்
பெருக விட்டே!

கண்டிப்பில் பெரியாராய்,
கனிவினில் அண்ணாவாய்,
கலைஞ ரோடு
தொண்டுக்குத் துணைநின்ற
தூயவனே! தூங்காமல்
தொழில்அ மைச்சாய்
எண்டிக்கும் புகழ்சேர்த்த
ஏந்தல்நீ விழிமூடி
ஏன்ப டுத்துக்
கொண்டாயோ நம்கழகக்
குடும்பத்தைக் கண்ணீரில்
குளிக்க விட்டே?

செந்தமிழ் முழங்கிவந்த
திருவாயும் ஓய்ந்ததுவோ!
"தியாக ராஜ
சுந்தர" ப்பொன் வதனம் அந்தோ!
சுடுகாட்டில் சாய்ந்ததுவோ!
"சூரி யத்தீ"
அந்தியிருள் வட்டத்தின்
அலைகளுக்குள் வீழ்ந்ததுவோ!
ஐய கோ! நின்
மந்திரப்பூம் புன்னகையை
மரணம்தான் தின்றதுவோ!
மன்னிப்போமோ?

புன்னகையை மறப்போமோ?
போர்க்குணத்தை மறப்போமோ?
புவியில் மூத்த
தென்மொழியாம் தமிழ்மொழியைச்
செம்மொழியாய் அறிவிக்கும்
தீர்மா னத்தை
முன்மொழிந்து மாநாட்டில்
முழங்கியதை மறப்போமோ?
முரசொ லித்த
மன்னவனே! நீபடைத்த
"மாநிலசு யாட்சி"யைத்தான்
மறக்கப் போமோ?

ஈடேதும் உண்டோ? இவ்
விழப்புக்கே! என்செய்வோம்
எங்கள் கண்ணீர்ச்
சூடாறும் முன், உன்னைச்
சுமந்திருக்கும் மேடையின்முன்
சூளு ரைப்போம்!
நாடாளு மன்றத்தில்
நடைபோட்ட சிங்கம்நின்
ஞாப கத்தைக்
கோடானு கோடிப்பேர்
கொண்டிழந்த இயக்கத்தின்
கொள்கை காப்போம்!!!



**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை தர்மலிங்கம்
### நவம்பர் 24 (1986)



**மாவட்டச் செயலாளராகவும், திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், அன்றைய வடஆற்காடு மாவட்டத்தின் தூண்களில் ஒருவராகவும் விளங்கினார்.**

**1957ஆம் ஆண்டில் தி.மு.க. முதல்முறையாக பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டபோது கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது**

**அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் மிக நெருங்கிப் பழகியவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

கு.ரமேஷ் ஏற்பாட்டில் – தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர்

# வே.குமரேசன் 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி - நல உதவிகள்!

## ஆர்.டி.சேகர் - ஐட்ரீம் மூர்த்தி - தா.இளைய அருணா - வ.பெ.சுரேஷ் பங்கேற்பு!



சென்னை, நவ. 24 -

தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினரும் ராயபுரம் முன்னாள் பகுதி கழக செயலாளருமான வே. குமரேசன் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் மலர் அஞ்சலி மற்றும் சமபந்தி விருந்து - வேட்டி சேலை வழங்கும் நிகழ்ச்சி இன்று (24.11.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் எண்.10/1 தெலுங்கு செட்டித் தெரு, பழைய வண்ணாரப்பேட்டையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு வ.பெ. சுரேஷ் தலைமை வகிக்கிறார்.

எம்.கே.இஸ்மாயில், சு.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், த. ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ. மோகன், வி.விஜய லட்சுமி விஜயகுமார் எம்.சி., எஸ்.ரமேஷ், இரா.பொன்முடி மற்றும் பலர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., தா.இளைய அருணா, இரா.செந்தில்குமார், மு. கோபி, நா.சண்முகம், கி. ராஜேந்திரன், வே.சிவகுமார், டாக்டர் சி. இளங்கோ, அன்பு, வி. தாமஸ், நா.கஜேந்திரன், சுவிஸ் கே.ராஜன், ரெயின்போ என். விஜயகுமார் உள்ளிட்ட பலர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஏழை, எளியோருக்கு சமபந்தி விருந்து, வேட்டி, சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார்.

நிகழ்ச்சியில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., டாக்டர் அ.சுபேர் கான், இரா.மதிவாணன், ந.மனோகரன், பி.டி. பாண்டி செல்வம், என். மருது கணேஷ், இரா. வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், க.நாகம்மை, இரா.லட்சுமணன், எஸ். ஜெபதாஸ் பாண்டியன், டி.வி.முத்துகிருஷ்ணன், த.தமிழ் கொடி, பொன் லட்சுமி, சிவகுரு, நேதாஜி யு.கணேசன் எம்.சி., ஏ.டி. மணி, எஸ்.கே.இளங்கோ, நெல்லை எம்.எம்.சாமி, பா.சு.மலர்விழி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு நினைவில் வாழும் வே.குமரேசன் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் மேற்கு பகுதி துணைச் செயலாளர் கு.ரமேஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்துள்ளார்.

நிறைவாக 48வது வட்டக் கழகச் செயலாளர் இரா.பாலன் நன்றி கூறுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவொற்றியூர் க.வீராசாமி
### நவம்பர் 24 (2008)



**திருவொற்றியூர் நகரத்தில் ஆரம்பகால கழகத் தோழர்.**

**திருவொற்றியூர் நகரக் கழக அவைத்தலைவராக, மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர். கழகத்தின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை பெற்றவர்.**

**திருவொற்றியூர் நகரமன்ற உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும், அசோக்லேலண்ட் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் மற்றும் நாணய சங்கத்தின் தலைவராகவும் இருந்து திறம்பட பணியாற்றியவர்.**

**வடசென்னை மாவட்ட தொ.மு.ச. மாவட்ட தலைவராக பணியாற்றி தொழிலாளர்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**